யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 07

## First Term Examination – 2020 – Grade 07

| செயன்முறைத் தொழில்நுட்பத்திறன்கள் | | T | I, II | இரண்டு மணித்தியாலம் Two Hours |
|---|---|---|---|---|
| சுட்டெண் Index No | | | | செயன்முறைத் தொழில்நுட்பத்திறன்கள் |

பகுதி - I

**மிகப் பெருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. மண்ணரிப்பைத் தடுக்கும் உயிரித்தடையாக கருதப்படுவது
    1. பழைய இறப்பர் துடைப்பாகங்களை இடல்
    2. மண் நிரப்பட்ட உறைகளை அடுக்குதல்
    3. பூசணி வெள்ளரி போன்ற பயிர்களை நடுதல்
    4. கல்வேலி அமைத்தல்

02. தோட்டத்தில் நேரடியாக நடுகை செய்யக்கூடிய பயிர் எது?
    1. தக்காளி 2. வெண்டி 3. கத்தரி 4. மிளகாய்

03. தண்டுத்துண்டங்கள் வேர்விடச் செய்யும் நாற்றுச் சாடியில் மேல் மண், கூட்டெரு, மணல் ஆகியவற்றை என்ன அளவில் கலந்து இடல் வேண்டும்
    1. 2 : 1: 2 2. 1: 2 :2 3. 2: 1: 1 4. 1: 1: 1

04. தரையை அலங்கரிப்பதற்கு பயன்படுத்தப்படும் வன்கூறு
    1. தாவரங்கள் 2. பறவைகள் 3. வண்ணத்துப்பூச்சி 4. சிலைகள்

05. விலங்குணவு எத்தனை வகைப்படும்
    1. 3 2. 4 3. 2 4. 5

06. நிழலை விரும்பும் தாவரம் எது?
    1. மா 2. கலேரியா 3. பலா 4. நெல்லி

07. தரையலங்கரிப்புச் செய்யும் போது முழுமையாக அகற்றப்பட வேண்டிய கூறுகளை குறித்துக் கொள்ள பயன்படுத்தப்படும் நிறம் யாது?
    1. சிவப்பு 2. பச்சை 3. நீலம் 4. கறுப்பு

08. தரையை அலங்கரிப்பதில் பற்றையாக வளரும் தாவரம்
    1. தேமா 2. நித்திய கல்யாணி 3. கமுகு 4. சித்திர வேம்பு

09. சூழற் சமநிலையில் பெருமளவு பங்களிப்பு செய்யும் காரணி
    1. மனிதர்கள் 2. தாவரங்கள் 3. விலங்குகள் 4. பறவைகள்

10. ஐதுத்தீன் வகைகளில் ஒன்று
    1. பிண்ணாக்கு 2. இப்பில் இப்பில் 3. அரிசித்தவிடு 4. சாமை



kalvi.lk

11. விலங்குகளின் உடலுக்கு சக்தியை கொடுக்கும் உணவுக் கூறு
    1. காபோவைதரேற்று, இலிப்பிட்டு
    2. காபோவைதரேற்று புரதம்
    3. புரதம், இலிப்பிட்டு
    4. விற்றமின் கனிப்பொருட்கள்

12. சூழலுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் கழிவுப் பொருள் எது?
    1. காய்கனிகளின் தோல்
    2. தேங்காய்ப்பூ
    3. கண்ணாடி
    4. இலைகள்

13. கூட்டெரு அடைப்பத் தயாரிக்கத் தேவையான உபகரணத் தொகுதி எது?
    1. குப்பை வாரி, கோடரி
    2. சுத்தியல், மண்வெட்டி
    3. மண்வெட்டி, அலவாங்கு, கத்தி
    4. அலவாங்கு, திருகாணி செலுத்தி

14. நாற்றுக்களைக் களத்தில் நடவேண்டிய கால எல்லையைத் தருக?
    1. மூன்று வாரங்கள்
    2. இரண்டு வாரங்கள்
    3. ஐந்து வாரங்கள்
    4. நான்கு வாரங்கள்

15. தரையலங்கரிப்பு முறைகள் எத்தனை வகைப்படும்
    1. 3
    2. 2
    3. 4
    5. 5

16. சமையலறையின் இயல்புகளில் ஒன்று
    1. சூரிய ஒளி காணப்படாமை
    2. குடிநீர் விநியோகம் காணப்படல்
    3. பிராணிகளின் நடமாட்டம்
    4. கழிவுப் பொருட்கள் காணப்படல்

17. அமிலம் சேர்ந்த மூலப் பொருட்களைக் கலக்கப் பயன்படும் கரண்டி வகை எது?
    1. வெள்ளிக் கரண்டி வகை
    2. அலுமினியக் கரண்டி வகை
    3. மரக்கரண்டி வகை
    4. இரும்புக்கரண்டி வகை

18. நீரில் அமிழ்த்தி அவித்தலுக்கு உதாரணம் தருக.
    1. இட்லி அவித்தல்
    2. பிட்டு அவித்தல்
    3. இடியப்பம் அவித்தல்
    4. சோறு சமைத்தல்

19. வட்டிலப்பம் சமைக்கும் பொருத்தமான முறை
    1. நேரடி நீராவியில் சமைத்தல்
    2. மறைமுக நீராவியில் சமைத்தல்
    3. நீராவி அமுக்கத்தை ஏற்படுத்தி சமைத்தல்
    4. அமுக்கப்பட்ட ஆவியில் சமைத்தல்

20. ஆழமற்ற எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவு
    1. வடை
    2. கருவாடு
    3. பற்றீஸ்
    4. கட்லற்

(20 x 1 = 20 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## பகுதி - II

### எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக

01. 1. தரையலிங்கரப்பில் தாவரங்கள் பயன்படுத்துவதன் நோக்கங்கள் 2 தருக?
    2. வளர்ச்சிப்பருவ கோழிக்கான தீன்கலவை யாது?
    3. வீட்டு வளவில் விலங்குகள் வளர்க்கப்படுவதன் நோக்கங்கள் 2 தருக?
    4. அலங்காரம் மற்றும் பொழுது போக்கிற்காக வளர்க்கப்படும் விலங்குகள் 2 தருக?
    5. சிதைவடையாத கழிவுப்பொருட்கள் 2 தருக?

(10 புள்ளிகள்)

02. 1. வீட்டுத்தோட்டம் மூலம் நீர் பெற்ற அனுகூலங்கள் 4 தருக?
    2. மண்வளம் குன்றுவதற்கான காரணங்கள் இரண்டு தருக?
    3. மண்ணின் தொழில்கள் இரண்டு தருக?
    4. மண்ணரிப்பு என்றால் என்ன?
    5. பயிர்ச்செய்கைக்கு இன்றியமையாத அடிப்படைக் காரணி எது?

(10 புள்ளிகள்)

03. 1. கழிவுப் பொருட்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
    2. கூட்டெரு தயாரிப்பை மேற் கொள்ளக்கூடிய மிக இலகுவான முறை யாது?
    3. 3R எண்ணக்கருவின் முழு வட்டத்தை தருக?
    4. நாற்று மேடை உலராது இருக்க யாது செய்ய வேண்டும்?
    5. மென் கூறுகள் என்றால் என்ன?

(10 புள்ளிகள்)

04. 1. பயிர்களுக்கு கூட்டெரு இடுவதன் அனுகூலங்கள் இரண்டு தருக?
    2. தரையலங்கரிப்பிற்கு தாவரங்கள் பயன்படுத்தும் பல்வேறு முறைகளில் 4 தருக?
    3. விலங்குகளுக்கு வழங்கப்படும் செறிவுணவுகள் 2 தருக?
    4. (Colander) கொலண்டர் உபகரணம் எதற்கு பயன்படுத்தப்படுகிறது?
    5. நிலக்கீழ் தண்டு தாவரங்கள் 2 தருக?

(10 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page